724

பதிவு எண்—M 6720 வெள்ளிக் கிழமையில் ... தாள

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை 6 திருதலம், மாம்பாக்கம்; செய, ஆடி. அ 23—7—51 தளிர் 40

மலையும் இறையும்

"நாணனு மன்பு முன்பு நவிர்வரை யேறத் தாமும்
பேணுதத் துவக்க ளென்னும் பெருகசோ பான மேறி
ஆணையாஞ் சிவத்தைச் சார அணைபவர் போல ஐயர்
நீணிலை மலையை யேறி நேர்படச் செல்லும் போதில்"

(பெரியபுராணம்: கண்ணப்ப நாயனார்)

மலை உயிர்களின் வாழ்வுக்குத் தாயகம். காடடர்ந்த பசிய மலை கண்ணுக்கும், கருத்துக்கும் எவ்வளவு இனிய விருந்தளிக்கின்றது. அக் காட்சி (விருந்து) உடல், உயிர் ஓம்பி, இளமையையும் நல்குவதாக இருக்கின்றது. மக்களின் வாழ்வு, நாகரிகம், மொழி, சொல், பாட்டு எல்லாம் முதன் முதலில் மலையினிடத்திருந்தே தோன்றின. வாழ்வுக்குரிய பொருள்கள் பலவற்றை உயிர்கட்கு மலையானது வாரி வழங்குகின்றது.

மலையில் வாழ்ந்த மனிதனுக்கு இயற்கையோடு இயைந்து வாழும் பேறு கிடைத்தது. இயற்கை நிலைகளின் அமைவுகளை உணர உணர மலைவாழ் மனிதனுக்குத் தன்னியல் விளக்கம் ஏற்பட்டது. தன்னியல் அன்புக்கு அடிப்படை. எனவே, இவ்வன்பு என்னும் காதலெழுச்சியே இறையுணர்வுக்கு தோற்றுவாயாக நின்றது.

மலையில் பசுமை, கருமை, வெண்மை என்னும் மூவகை நிலைகள் உள்ளன. இவ் வகைகள் முறையே மாயை, ஆணவம், மெய்யறிவு என்னும் நிலைகளை உணர்த்துவனவாம். பசுமை—மாயை. கருமை-ஆணவம். நம்மிடத்தேயுள்ள மாயா அடவியிலிருந்து மீண்டு ஆணவம் என்னுங் கருங்கற் பாறைப் பகுதியையுங் கடந்து நின்றால் வெண்மையொளி என்னும் மெய்யறிவொளி விளக்கம் பெறுகிறோம்

இறைவன் உண்மையில் தோன்றிய ஐயப்பாடுகளைப் போக்கி இறையுண்மையை காட்டிச் சென்ற பெரியோர்கள் பலமுறை மலையினை நோக்கியுள்ளனர். நண்ணரிய சிவானந்த வடிவேயாகி அண்ணலார் சேவடிக்கீழ் அமர்ந்து பெறற்கரிய நிலை கூடிய போழ்தும் அப்ப மூர்த்திகள் "கழுக்குன்றத் துச்சியாய்க் கடவுளே" என விழுமிய மலையுச்சியினையே நினைந்து கொண்டனர். மாண்பமைந்த மலையுச்சி புறத்தினையும் அகத்தினையும் குறிப்பிடும். எனினும், அகமலையுச்சி நண்ணலே பேரின்ப நிலையாம். அந் நிலையைத்தான் நிர்வாணம், சத்திநிபாதம் எனப் பலர் பலபடியாகக் கூறுவர்.

நீக்கமற நிறைந்து விளங்கும் இறை நினைவை ஊட்டவல்லது, பரந்து வானமளாவ நெடிதுயர்ந்து ஓங்கி நிற்கும் மலை ஒன்றே. அதன்கண் உறையும் இறையாஞ் சிவத்தைச் சார மாயா காரியங்களாகவுள்ள தத்துவ(மலை)ப் படிகளை ஏறிக் கடந்து செல்ல வேண்டுவது கடமையாக இருக்கின்றது.

இயற்கையோடு இயைந்து இறையுண்மை உணர்பவர்கள் மலைப்பெரியோர். அவர்கள் அனைத்தையும் ஆண்டவன் வடிவாக எண்ணித் தம்மை மறந்து ஒருமையின்பத்தில் திளைப்பர். இன்னோரன்ன பெரியார்களைத் தியான நிலையில் தாங்கி நிற்பது மலை.

'மூர்த்தி'

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

6-ம் ஆண்டுக் கையொப்பம்

(23-10-53 முதல்)

உள்நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0

ஆயுள்—

கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.

கிளை	செய, ஆடி,	தளிர்
6	23-7-54 வெள்ளி.	40

அருளால் வளரும் அணிவிழா

இவ்வாண்டு சென்னைச் சிவனடியார் திருக் கூட்டத்தின் சார்பில் வழக்கம்போல் ஆளுடைய அடிகளின் ஆனி மகத் திருநாளை ஒட்டித் திருக்கழுக்குன்றத்தில் நடைபெற்ற திருமுறை இன்னிசைப் பெருவிழா முன்னாண்டுகளை விடச் சில வளர்ச்சிகளைப் பெற்றுப் பெருஞ் சிறப்பாக நடந்து முடிந்திருக்கின்றது.

ஏற்பட்டுள்ள வளர்ச்சிகளையும் விழா ஏற்பாடுகளில் இருக்கின்ற சூழல்களையும் கூர்ந்து பார்க்கின்றபோது இவ்விழாவைத் திருவருளே விரும்பி வளர்த்து வருகின்றது என்னும் உண்மை தெளிவாகத் தெரிகின்றது.

திருக் கூட்டத்தார் தம்முடைய நிலைகளை நினைந்து இவ்விழாவைக் குறிப்பிட்ட ஒரு சில வரையறைக்குள் கட்டுப்படுத்தி அதுவரையில் சிறப்பாகச் செய்வது என்று இவ்வாண்டு முடிவு செய்திருந்தனர்.

இவ் விழாவில் மிக்க ஈடுபாடுடைய ஆசிரியர் இளவழகனார் அவர்களும், அவர்களின் குருகுலத்தாரிற் பலரும் சோழ நாட்டுத் திருப்பயணத்தில் ஈடுபட்டு விட்டதால் விழா ஏற்பாடுகளில் சிறிதும் கலந்துகொள்ள முடியாத நிலையில் இருந்துவிட்டனர். பெரும்பாலும் திருக் கூட்டச் செயலாளர் திரு மா. ரா. சம்பந்தம் அவர்கள் ஒருவரே விழா ஏற்பாடுகளைத் தம் பல்வகை, வேலை நெருக்கடிகளுக் கிடையில் செய்து வந்தார்கள்.

இந் நிலைகளில், விழா கீழ்க் காணும் வளர்ச்சிகளைப் பெற்றுச் சிறப்புற்றிருக்கின்றது என்றால், திருவருளே இவ் விழாவை வளர்த்து வருகின்றது என்பது சிறிதும் மிகையாகாதன்றோ?

திருக்கழுக்குன்றத்தின் பழங் கோயிலாகிய 'உருத்திரகோடீச' வழிபாடு; ஆக்கவுரை (பிரசாரம்) யோடு கூடிய ஊர்வலம்; நாடோறும் திருமுறை இசையரங்கு; தங்கத் திருவடிக்குச் சிறப்புத் திருமுழுக்கு; திருமலையைச் சுற்றி அடிவாரம், மருந்துமலை, சொக்கம்மைச்சாரல், நால்வர் கோயில் ஆகிய இடங்களில் முறையே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நாற்பாதங்களுக்கும் பொருத்தமான நிகழ்ச்சிகளின் அமைவு; சூழவுள்ள பேட்டையினரின் செயல்முக ஈடுபாடு; அங்கங்கே உணவளிப்பு; ஆதீன ஓதுவார்களின் வருகை இவை எல்லாம் முன்னாண்டுகளில் அமையாது புதியவாக இவ்வாண்டில் அமைந்து ஊக்கமும் மகிழ்ச்சியும் விளைவித்த நன்னிகழ்ச்சிகளாகும்.

விழா ஏற்பாடுகளைச் செய்தவர்களுக்கு நன்கு தெரியும் இவையாவும் தாமே இயல்பாகத் திருவருள் உந்துதலினாலேயே அமைந்த நிகழ்ச்சிகள் என்பது

எனவே, அருளை வளர்க்கும் இவ் வணிவிழாவை உரியவர்கள் எல்லோரும் இன்னும் வேண்டிய அளவு கட்டுப்பாடாக ஈடுபட்டுக் கலந்து பேசிக் குறை நிறைகளை அறிந்து அவைகளை நீக்கவும் மிகுக்கவும் இயன்ற பெற்றி முயன்று சிறப்புற நடத்த முனைந்தால், எதிர்பார்க்கிறபடி இவ் விழா தென்னாட்டுப் பெருவிழாவாகி இந் நாட்டு மொழி, கலை, தொழில், அருள், பணி என்னும் ஐவகை வாழ்வியல் துறைகளிலும் நல்ல மறுமலர்ச்சியையும் முன்னேற்றத்தையும் உண்டாக்கும் என்பதில் ஐயமென்ன இருக்கின்றது?

பேட்டைப் பெருமக்களின் பேரன்பு

திருக்கழுக்குன்றத் திருமுறைப் பெருவிழா கடந்த ஒன்பது ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றது. சென்னைச் சிவனடியார் திருக் கூட்டத்தார் அதை முன்னின்று நடத்தி வருகின்றார்கள். அவர்கட்கு வேண்டும் ஊக்கத்தையும் உதவிகளையும் ஆசிரியர் இளவழகனார் அவர்களும், அவர்களின் மாம்பாக்கம் குருகுலத்தாரும் அளித்து வருகின்றார்கள்.

சைதைத் திருவள்ளுவர் செந்தமிழ்ச் சிவநெறிக் கழகத்தார், சென்னை அருணகிரிநாதர் பக்த

ஜன சபையார், இராயபுரம் இறைபணிக் கழகத்தார், வண்ணை சன்மார்க்க சங்கத்தார், வண்ணை மாதர் திருநெறிக் கழகத்தார் போன்ற பல அருள்நெறி அமைப்பினர் இணக்கங் காட்டி விழாவிற் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

யார் எவ்வளவு ஊக்கமும் ஆக்கமும் செய்தாலும், வெளியூரி விருந்து வருபவர்கள் செய்யும் விழா உள்ளூரன்பர்களின் உதவியும் ஈடுபாடுமில்லாமல் இருந்தால் சிறக்குமா?

கடந்த ஆண்டுகளில் விழாச் செய்பவர்களும் உள்ளூர்ப் பெருமக்களை ஓரளவுக்குத்தான் தழுவிக்கொள்ள முடிந்தது. அவர்களிலும் திருக்கோயிலாரும் தனிப்பட்ட ஒரு சிலருந்தான் சிறு சிறு உதவிகளைச் செய்து வந்தார்கள்.

இவ்வாண்டு இவ்விழாவின் பயனாகவே சென்ற ஆண்டில் தோன்றிச் செயலாற்றி வரும் மெய்கண்டார் திருத் தொண்டர் கழகத்தினரின், குறிப்பாக அதன் செயலாளர் திரு. டி. சுப்பிரமணியம் அவர்களின் தூண்டுதலினாலும் நன் முயற்சிகளினாலும் சூழவுள்ள பல பேட்டையினரும் விழா நிகழ்ச்சிகளில் பேரன்புடன் ஈடுபட்டு அங்கங்கே தம்மாலியன்ற அளவு கீழ்க்காணும் சிறப்பு ஏற்பாடுகளையும் செய்து ஊக்க மூட்டியிருக்கிறார்கள்.

இனி, ஆண்டுதோறும் பேட்டைப் பெருமக்களின் ஈடுபாடும் ஏற்பாடுகளும் படிப் படியே சிறந்து வரும் என்றும் தெரிகின்றது. திருக்கூட்டத்தாரின் தகுதியும், கடந்த ஆண்டு விழாக்களினால் திருக்கழுக்குன்றத்துக்கு ஏற்பட்டிருக்கிற நலங்களும் அவ்வளவுக்கு அவர்கள் எல்லாரையும் ஈர்த்திருக்கின்றன.

உள்ளூர்ப் பெருமக்கள், பேட்டைப் பெருமக்கள், திருக்கோயில் அறக்காவலர்கள் சார்பில் மெய்கண்டார் திருத்தொண்டர் கழகத்தார் வரவேற்பு ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்து வரவேற்பு நல்லுரை ஒன்றையும் அச்சிட்டு வழங்கினார்கள்.

உருத்திரகோடிசத்தில் திருவாளர் துரைபாபு நாயுடு (கி மு) அவர்கள் முன்னின்று அப்பகுதியில் அங்கங்கே தோரணங்களும் வரவேற்புத் தொடர்கள் அடங்கிய வளைவுகளும் கட்டச் செய்து குடை, கொடி, மாலை, மேளதாளங்களுடன் ஊர்வலமாக வரவேற்றும், திருக்கோயிலைத் தூய்மைப் படுத்தி அதன் திருச் சுற்று (பிராகாரங்) களிலும் பெரிய அளவில் உழவாரப்பணி செய்வித்தும், வந்த நூற்றுக்கணக்கான அன்பர்களுக்குச் சுண்டல் முதலிய அருளமுதும் (பிரசாதம்) மோரும் வழங்குவித்தும் நன் முறையில் வழிபாடு செய்து வைத்து மகிழ்வித்தார்கள்.

அத் திருக்கோயில் தொண்டர் திரு. கன்னியப்பர் அவர்களே அக்கோயில் வழிபாட்டை மேற்கொள்ளுமாறு அவ்வப்போது திருக்கூட்டத்தாரை வற்புறுத்தி வந்தார்கள் அவர்களும் உடனிருந்து மேற்கண்ட ஏற்பாடுகளைச் செய்து மகிழ்ந்தார்கள்.

மூவர் பேட்டை என்னும் நால்வர் பேட்டைப் பெருமக்கள் திரு. வீரபத்திர முதலியார் திரு, S. நடேச முதலியார், திரு, கணபதி முதலியார், கொங்கணவர் நடேச முதலியார், ஷியார் மருகர் சுந்தரம் முதலியார் கஸ்தூரிபா கழகத் தலைவர் சுந்தரம், திரு, பாலசுந்தரம் முதலியவர்கள் வடதிருச்சிற்றம்பலத்தி லிருந்து (மாம்பாக்கம்) ஆசிரியர் அவர்கள் தலைமையில் வந்த அன்பர்கள் 150 பேருக்கு 1.7-54 அன்று நண்பகலும் இரவும் அறுசுவையுண்டியை அன்போடு வழங்கியதன்றி, 4-7-54 அன்று மாலை நால்வர் கோயிலில் மின்விளக்கு பந்தல் முதலிய நல்ல பல ஏற்பாடுகளைச் செய்து அவ்விடத்து வழிபாடும், மணிவாசகர் ஊசலும், திருமுறை இசையரங்கும் நன்கு நடைபெறவகை செய்ததோடு, மலைவலமாகப் பாராயணம் செய்து வந்த சபையார் பலர்க்கும் சிற்றுண்டியும் சுவை நீரும் வழங்கி ஊக்கமூட்டினார்கள்.

மருந்து மலைச்சாரலில் உள்ள ஏரிப்பேட்டை என்னும் தேசமுகிப் பேட்டையினர் எல்லோரும் ஒன்றுபட்டுத் திருவடிக் கோயிலிடத்தில் பெரிய பந்தலை அமைத்துக் கொடுத்தும் ஆனி மகத்தன்று (4-7-54) தங்கத் திருவடிக்கு நடைபெற்ற சிறப்புத் திருமுழுக்குக்கு வேண்டிய பூசைப் பலகை, அண்டா, தோண்டி, தட்டு முதலியவற்றை உதவியும் அன்று நண்பகலில் 400-500 பேருக்கு அருளமுது (பிரசாதம்) வழங்கியும் உதவி செய்தார்கள். இவ்வுதவிகளைத் தம் பேட்டை மக்கள் சார்பில் முன்னின்று செய்தவர்கள் திரு. வே. கிருஷ்ணசாமி, முதலியார் திரு. வேணு முதலியார் (பஞ்சாயத்து உறுப்பினர்) திரு. இலிங்கப்ப முதலியார், திரு. வேலு முதலியார் திரு. ஏகாம்பர முதலியார் திரு. லோ. வேதாசல முதலியார் திரு சி. கன்னிவேல் முதலியார், திரு. மகாதேவ முதலியார், முதலியோராவர்.

விழாநிகழ்ச்சி இடங்களுக்கு முன் அடங்காமல் சற்றுத்தள்ளியுள்ள கானக்கோயிற்பேட்டைப் பெருமக்களாகிய திரு. அருணாசல முதலியார், (தருமகர்த்தர்) திரு. எம். வடிவேல் முதலியார், திரு, கணபதி முதலியார் தேவாரம். திரு, சுந்தரவடிவேல் முதலியார் முதலியவர்களும் திருமுறைப் பேரவை நடந்த 3-7.54 அன்று நண்பகலில் செங்குந்தர் சத்திரத்தில் நூற்றுக்கு மேற்பட்டவர்களுக்குத் திருக்கூட்டத்தாரைக் கொண்டே உணவுச் சீட்டு கொடுக்கச் செய்து அரிய அறுசுவை உணவை அளித்து மகிழ்ந்தார்கள்.

வழக்கம்போல் திருக்கோயிலார்களும் குறிப்பாகத் தருமகர்த்தர் பாலசுந்தர நாயகர் அவர்களும், குருக்கள்மார்களும், மானேஜர், மணியக்காரர் முதலியவர்களும் இவ்வாண்டு வேண்டிய உதவிகளை வேண்டிய படி எல்லாம் பேரன்போடு செய்து உதவி மகிழ்வித்தார்கள்.

இவ்வாறெல்லாம் உள்ளூர் பொதுமக்களும், பெருமக்களும் இவ்வாண்டு பேரன்போடு விழாவில் ஈடுபட்டிருப்பதால் இனி வரும் ஆண்டுகளில் இவ்விழா இன்னும் பலவகைகளில் சிறந்து நிற்கும் என்று சொல்லவும் வேண்டுமா?

திருக்கழுக்குன்றத்தைச் சூழ்ந்து, கிழக்கே கடற்கரை வரையிலும், தெற்கே மாம்பாக்கம், மதுராந்தகம் வரையிலும் மேற்கே காஞ்சிபுரம் வரையிலும் வடக்கே சென்னை வரையிலும் உள்ள எல்லைக்குட்பட்ட ஒவ்வொரு சிற்றூர் பேரூர் வரையிலாவது இவ்விழாப்பற்றிய விளம்பரங்களும், ஆக்கவுரைகளும் (பிரசாரங்களும்) பரவலாக எட்டும்படி செய்ய வேண்டும். செய்தால் இன்னும் எவ்வளவோ ஆக்கமும் சிறப்பும் ஏற்படும் என்னும் பேருணர்வை இவ்வாண்டு விழாவில் பேட்டைப் பெருமக்கள் நல்கி இருக்கிறார்கள். வெல்க அவர்கள் முயற்சி! விளங்குக அவர்கள் பேட்டை!!

திருவமுது வழங்கிய திருச்செல்வர்கள்

ஒன்பதாம் ஆண்டு திருக்கழுக்குன்ற விழாவில் வழக்கம்போல் வண்ணையம்பதி சிவத்திரு வள்ளியம்மையார் அவர்கள் ஆயிரக்கணக்கான மக்களுக்கு (இரண்டு நாட்கள் மட்டும் இடுவதாகச் சொல்லி) மூன்று நாட்கள் இரவும், பகலும் பெருஞ்சோறும் சிற்றுண்டியும் வழங்கினார்கள். விழாவின் வளர்ச்சிக்கே அப்பெருமாட்டியார் தான் காரணம் என்பது பலரும் அறிந்ததே.

சென்ற ஆண்டு தாமாகவே முன் வந்து விழாவின் இடையில் ஒருநாள் நூற்றுக் கணக்கான அன்பர்களுக்கு காலைச் சிற்றுண்டியும், பகலும் இரவும் உணவும் வழங்கிய ஆனந்தவிகடன் பைண்டர் தலைவர். வண்ணை திரு வ. சம்பந்த முதலியார் அவர்கள் இவ்வாண்டு, கேட்டுக் கொண்டபடி 3-7-54 அன்று மூன்று வேளையும் ஆயிரத்துக்கு மேற்பட்ட அன்பர்களுக்கு சிற்றுண்டியும் உணவும் வழங்கியதோடு தாழக்கோயில் ஆறுமுகப் பெருமானுக்கு அன்று காலைத் திருமுழுக்கும் சிறப்பு வழிபாடும் செய்து வைத்தார்கள்.

விழாத் தலைவர் சொற்பொழிவாளர் பாடகர்களுக்கு எனத் தனியே சென்ற ஆண்டிற் சிற்றுண்டி உணவு முதலியனசெய்து வைத்த மரக்காணம் எக்கிய சிங்காரவேல் முதலியார் அவர்கள் தம் மருகர் திரு. அப்பாராவ் முதலியார் முதலிய உறவினர்கள் துணையுடன் இவ்வாண்டு மூன்று நாட்களும் காலை, பகல், இரவு வேளைகளில் விழாத் தொண்டர்களுக்கும் சேர்த்து 50 க்கு மேற்பட்ட அன்பர்களுக்கு உணவு செய்து வைத்தார்கள்.

இப் பெருமக்களுடைய வள்ளன்மையினாலும், பேட்டை மக்களின் வள்ளன்மை இணக்கத்தாலும், ஆண்டுதோறும் மிகுதியாக இருந்த உணவு நெருக்கடி இவ்வாண்டு நன் முறையில் தீர்க்கப்பட்டு விழா அமைதியாகவும் சிறப்பாகவும் நடைபெற்றது.

(வரும்)

ந.ரா. ஆடலரசு.

Phone 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட்மார்க்

ELEPHANT KISAN

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

விழா நிகழ்ச்சியின் விளக்கம்

மாம்பாக்கம் நிகழ்ச்சி

திருக்கழுக்குன்றம் ஒன்பதாம் ஆண்டு ஆனிமகத் திருமுறைப் பெருவிழா நிகழ்ச்சிகள் சென்ற ஆண்டிற் போலவே ஆசிரியர் இளவழகனார் அவர்களின் குருகுலம் அமைந்துள்ள மாம்பாக்கம் என்னும் வடதிருச்சிற்றம்பலத்தில் தொடங்கி நடக்கவேண்டும் என்று ஏற்பாடுகள் செய்யப்பெற்று விளம்பரங்களும் வெளியிடப்பெற்றன. எதிர்பாராது ஏற்பட்ட சிலகளால் சென்னை அமைப்பாகிய 'சிவனடியார் திருக்கூட்டம்' என்பது, குறிப்பிட்ட நாளிலும் நேரத்திலும் (26-9-54 செவ்வாயன்று பிற்பகல்) மாம்பாக்கம் சாரமுடியாமற் போயிற்று. காஞ்சியிலிருந்து வரவேண்டிய யானைக்கும் அது முன்ஏற்பாடு செய்யவில்லை. இந் நிலையில் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தை எதிர்நோக்கி ஆசிரியர் செய்திருந்த பெரிய ஏற்பாடுகள் எல்லாம் தடைப்பட்டு, அங்கே கூடியிருந்த அன்பர்களுக்கு மிக்க வருத்தத்தை விளைத்தன

ஆயினும் ஆசிரியர், மதுராந்தகத்திலிருந்து சென்ற ஆண்டு போலவே வரவழைத்திருந்த திருவெண்காட்டீசருக்கும், குருகுலத்துப் பிள்ளையார், மாணிக்கவாசகர் முதலியவர்களுக்கும் சிறப்பாகத் திருமுழுக்குச் செய்வித்தும், அன்று பகலும் இரவும், தம்மோடு சோழநாட்டுத் திருப்பயணத்திற்கு வந்து நேரே குருகுலத்துக்கு வந்திருந்தவர்களும் சென்னையிலிருந்து விழா நிகழ்ச்சிகளையறிந்து வந்தவர்களுமாகக் கூடியிருந்த இருநூற்றுக்கு மேற்பட்ட அன்பர்களுக்கு உணவும் சிற்றுண்டியும் குருகுலச் செல்வியார் காட்டரண்பாக்கம் திருமதி செயலட்சுமி வரதா ரெட்டியார் அவர்களைக்கொண்டு கொடுத்தும், மதுராந்தகம் வரை மேற்கண்ட உடையவர்களுக்கு திருவுலாச் செய்வித்தும் மகிழ்வித்தார்கள்.

வல்லிபுரம் அம்மையார் அழைப்பு

பிறகு, வழியிலும் தக்க ஏற்பாடுகளைத் திருக்கூட்டம் செய்யவில்லையென்று தெரிந்ததால், தாம் சென்னை திரு வேதாசலம் செட்டியார் அவர்களால் தமக்கு வழிபாட்டுக்காக வழங்கியுள்ள தங்கத் திருவடியுடன், மாட்டு வண்டியிற் புறப்பட்டு வல்லிபுரம் வந்துவிடுவதாகவும், அன்பர்களை இரயிலில் படாளம் வரை வந்து வல்லிபுரம் வரும்படியும் ஆசிரியர் தெரிவித்தார்கள். வழுவத்தூரிலிருந்து திருக்கூட்டத்தார்க்குச் சிற்றுண்டி, உணவு, வரவேற்பு, வழிபாடு முதலிய ஏற்பாடுகளைச் செய்திருப்பதாக வழுவத்தூர் சிவத்திரு காநதிபதி அம்மையார் அவர்கள் சொல்லியனுப்பி இருந்தார்கள்.

வல்லிபுரம் வழி வழுவத்தூர் சார்தல்

நடக்கமுடியாத அன்பர் சிலர், நேரே செங்கற்பட்டு வழித் திருக்கழுக்குன்றம் சென்றுவிட்டனர். ஏறத்தாழ ஒரு நூறு அன்பர்கள் 30-1-54 புதன் காலை இரயிலில் படாளம் வந்து பாலாற்றில் மூழ்கி வல்லிபுரம் சார்ந்தனர். ஆற்றங்கரைக்கே அம்மையார் அவர்கள் அன்போடு அனுப்பியிருந்த பொங்கல், மோர் முதலியவற்றை உண்டு இளைப்பாறி ஏற்பாடு செய்த வண்டியில் 12 மணிக்கு வசதியாக வழுவத்தூர் வந்தார்கள்.

ஆசிரியரும் உரியநேரத்தில் வழுவத்தூர் சேர்தலும், குடை, கொடி, மேளம், பாட்டு, பழம், கற்கண்டு,வெற்றிலைப் பாக்குத் தட்டுகள் பூரண கும்பங்களுடன் ஊர்வலமாகச் செய்த வரவேற்பை ஏற்றுக்கொண்டு அம்மையார் வீட்டை அடைந்து அளவளாவி அவர்கள் அளித்த அறுசுவை உணவை அருந்தி, ஓய்வு கொண்டார்கள்.

வழுவத்தூர் சிறப்பு நிகழ்ச்சிகள்

பிற்பகல் சிறிது மழை பொழிந்து ஊர் முழுதும் நீர் தெளித்தது போல இனிய காட்சியை உண்டாக்கியது. அன்பர்கள் 5 மணிக்குப் பாராயணத்தோடு ஊர்வலமாக அக்கினிபுரீசர் ஆலயத்தைச் சார்ந்து அங்கே ஆசிரியர் ஏந்திவந்திருந்த தங்கத் திருவடிக்குச் சிறப்பாக நடத்தப்பெற்ற திருமுழுக்கைக் கண்டு மகிழ்ந்தார்கள்.

குருக்களின் அன்பு

அவ்வூர் குருக்கள் தமிழன்பும் வடமொழிப் பயிற்சியும் மிக்கவராய் ஆர அமர வேத மந்திரங்களைத் திருத்தமாகவும் அழகாகவும் ஓதித் திருமுறைப் பாடல்களையும் ஓதுவித்துப் பூசையை முடித்து, இறுதியில் ஆசிரியரையும் உடன் வந்தவரையும் வரவேற்று வணங்கினர்.

Telegrams: "RAMBROS"
N. Ramu Bros,
GENERAL HARDWARE
MERCHANTS
AVANASHI ROAD,
COIMBATORE.

ஆசிரியர் தெளிவுரை

பிறகு ஆசிரியர் அவர்கள் சோழநாட்டுத் திருப்பயணத்தைப்பற்றி பிழிவாகப் பேசித் திருக்கழுக்குன்றத்தை நோக்கியதே அத்திருப்பயணம் என்றும், அதற்குச் செல்லும் வழியில் வழுவத்தூரில் அம்மையாரும் மற்றவர்களும் காட்டும் பேரன்பு பெரிதும் பாராட்டத்தக்கதென்றும், உருத்திர சிவம்—பரசிவம் என இரு பிரிவுகளில் நின்று இறைவன் ஆன்ம கோடிகளின் குறைகளைப் போக்கியும் நிறைகளை மிகுத்தும் வருகின்றான் என்றும், வடமொழி மந்திரங்களும் தமிழ்த் திருமுறைகளும் முறையே பொதுவாக உருத்திரத்திறத்தையும் சிவத்தின் திறத்தையும் பற்றிக் குறிக்கும் என்றும் திருமுறைகளிலும் தேவாரம் என்னும் மூவர் வாக்கு உருத்திர வடிவத்தைப் பெரிதும் விளக்கத், திருவாசகம் சிவ நிலையைத் தெளிவிக்கும் என்றும் வடமொழி தென்மொழிப் பாடல்களை ஓதவேண்டிய முறைகள் பற்றியும் கூறிச் சிறந்ததொரு தெளிவுரையை நல்கினார்கள்.

வழுவத்தூரார்க்கு வேண்டுகோள்

பிறகு அன்பர் ஆடலரசு அவர்கள் ஊராருக்கு நன்றிகூறுமுகத்தான், சோழநாட்டுத் திருப்பயணத்தில் தாம் கலந்து கொள்ளமுடியாமற்போன, தம் ஏக்கத்தையும் குறையையும் வெளியிட்டு வழுவத்தூர் நிகழ்ச்சிகளிற் கலந்து கொண்டதால் அக்குறையும் ஏக்கமும் ஓரளவு தீர்ந்து மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கிறதென்றும் அக்கினிபுரீசர் எழுந்தருளியுள்ள வழுவத்தூர் (உருத்திரபுரி) குறைகளைப் போக்கும் சிறப்பைப் பெற்றிருக்கிறது எனச் சில சான்றுகள் காட்டி விளக்கியும் அவ்வூர் மக்கள் தம் குறைகள் அகலவும் நிறைகள் பெருகவும் அக்கினிபுரீசர் ஆலயத்தையும் அடுத்துப் பழைமையானதாய் அழகிய சிற்ப வேலைகளுடன் நல்ல நிலையில் சிறிது பாழடைந்து பூசையின்றிக் கிடக்கும் திருக் கோயிலைச் சீர்திருத்திச் சிவபுரி என்னும் பெயருடன் போற்றி வரவேண்டும் என்றும், வடமொழி வேதாகம தென்மொழித் திருமுறைப் பாடசாலைகளை முறையே இவ்விரண்டு கோயில்களையும் சார்ந்தாற்போல் நிறுவி நடத்துவது நல்லது என்றும் தெரிவித்தார்கள்.

கழுக்குன்றத்துக்குப் புறப்படுதல்

இரவு 11 மணிக்குமேல் அம்மையார் அவர்கள் வீட்டில் நல்லுணவுகொண்டு உறங்கி மறுநாள் 1-7-54 காலையில் எழுந்து கடன் முடித்து மறுக்க முடியாமையால் அவர்கள் கொடுத்த சுவை நீரை (காபி) மட்டும் உண்டு அன்பர்கள் ஆசிரியருடன் திருக்கழுக்குன்றம் புறப்பட்டனர்.

உருத்திரகோடீசர் வழிபாடு

இரவு சிறிது மழை பொழிந்து வானமும் பூமியும் குளிர்ந்து காண இனிதாயிருந்த அக்காலைப் போதில், எதிர்வெயில் நேரமாயிருந்தும் அதன் வெப்பம் சிறிதும் உணராது ஆசிரியர் சூழலின் அருமை பெருமைகளை எண்ணி எண்ணி மகிழ்ந்து பேசிக் கொண்டே முற்பகல் 9 மணிக்குள் திருக்கழுக்குன்றம் சார்ந்தனர். சங்கு தீர்த்தத்தில் நீராடினர் திருவடிப் பூசை செய்து கொண்டு ஆசிரியர் வா குருகுலத் திருக்கூட்டத்துடன் சென்னை முதலிய இடங்களிலிருந்து வந்த ஏனைத் திருக்கூட்டங்களைச் சார்ந்தவர் சிற்சிலரும், சென்னைச் சிவனடியார் திருக்கூட்டச் செயலாளர் திரு. ம. ரா. சம்பந்தம் அவர்களும் பிறரும் கலந்து கொண்டனர். உருத்திர கோடீசர் திருக்கோயிலுக்குப் புறப்பட்டனர்

அக்கோயிலைச் சார்ந்த ஊர்ப் பெருமக்கள் குடை, கொடி, மேளதாளங்களுடன் மாலையிட்டு சந்தனம், பன்னீர் வழங்கி வரவேற்று அழைத்துச் சென்று அன்போடு வழிபாடு செய்வித்தனர். வழிபாடு முடிந்தபின் ஆசிரியர் அக்கோயிலின் சிறப்பையும் அவ்வூர்ப் பெருமக்களின் அன்பையும் பாராட்டி விழாவின் வளர்ச்சி சிறப்புக்களை விளக்கினார்கள். அன்பர் ஆடலரசு நன்றி கூறி மேல் நிகழ்ச்சிகளைப் பற்றித் தெரிவித்த பின் அனைவரும் (சற்றேறத்தாழ இருநூறு பேர்) 'மூவர் பேட்டை' என்னும் நால்வர் பேட்டையை அடைந்து அங்கே அப்பேட்டைப் பெருமக்கள் பேரன்புடன் வழங்கிய அறுசுவை உணவை அருந்தி ஓய்வு கொண்டனர்.

அடியார் கூட்டம் திரளுதல்

இடையே யிடையே சென்னையிலிருந்தும் சுற்றுப் புறங்களிலிருந்தும் மக்கள் திரள் திரளாக வந்து குழுமிக் கொண்டே இருந்தனர். குருகுலத்தார் இராசகோபால் செட்டியார் சத்திரத்திலும், மற்றும் பற்பலர் பற்பல சத்திரங்களிலும் கூட்

டம் கூட்டமாகத் தங்கினர். வழக்கம்போல் இரத்தின செட்டியார் சத்திரத்தில் குருகுலச் செல்வியார் வண்ணையம்பதி சிவத்திரு வள்ளியம்மையார் அவர்கள் குருகுலச் சார்பில் உணவு வழங்க ஏற்பாடுகள் செய்திருந்தார்கள். 63 வர் குருபூசை மடத்துக் கார்பார் சிவத்திரு அண்ணாமலை தேசிகர் அவர்கள் ஆதீனத்திலிருந்து வந்திருந்த ஓதுவார் பெருமக்களுக்குத் தாமே முன் வந்து இடம் அளித்து அங்கே இருத்திக் கொண்டார்கள். அடுத்துள்ள தனி விடுதி, மதுரையிலிருந்து வந்த விழாத்தலைவர் அவர்கட்குச் சென்ற ஆண்டு போலவே ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தது. மக்கள் திரண்டு திரண்டு தாம் தாம் தங்க இடங்களைத் தேடிக் கொண்டிருந்தனர். சூழவுள்ள பேட்டைகளிலும் சுற்றத்தார் நண்பர் இல்லங்களிலும் மக்கள் திரண்டு தங்கியிருந்தனர். இவ்வளவு கூட்டமும் ஏறத்தாழ 3000 பேர் விழா முழுவதிலும் வழக்கமாய்த் தொடர்பாய் இவ்விழாவுக்கு வந்தே தீரவேண்டும் என்னும் அன்பிலும் தீர்மானத்திலும் நிற்கும் கூட்டமாகும். இதுவன்றிப் பொது மக்களாய் விழா விளம்பரங்களைக் கேட்டும் அவ்வப்போது வந்து மகிழ்ந்த கூட்டம் பல்லாயிரக் கணக்கிலிருக்கும்.

இது நிற்க, பிற்பகல் 4 மணியிலிருந்தே மழைத் துளிகள் பன்னீர் தெளிப்பதுபோல அன்பர் கூட்டங்களை வரவேற்றுக்கொண்டிருந்தன என்றாலும், விளம்பரத்தில் குறிப்பிட்டிருந்தபடி (1-7-54) வியாழனன்று மாலை 5 மணிக்கு அடிவாரத்தில் பெருங்கூட்டம் கூடியிருந்தது.

மரம் நடுவிழா

அதுபோது அங்கே அரசாங்கச் சார்பில் அமைச்சர் மாணிக்கவேலர் அவர்கள் தலைமையில் மாவட்டத் தண்டல் தலைவர் (Collector) முதலிய அதிகாரிகள் கூடி 'மரம் நடுவிழா' (வனமகோத்சவம்) நடத்திக்கொண்டிருந்தனர். தக்க அந்த நேரத்தில் ஆசிரியர் எழுதிய 'திருக்கழுக்குன்ற மாட்சி' (125 காரணங்கள் அடங்கியது) நூல் அவ்வதிகாரிகளுக்கும், தரும கர்த்தர், பஞ்சாயத்துத் தலைவர் முதலியோர்களுக்கும் வழங்கப்பட்டது. "ஆண்டு தோறும் மலையைச் சுற்றியும், குறிப்பாக மருந்து மலைச்சாரலிலும் தகுந்த அன்பர்களைக் கொண்டு மரங்களை நடுவித்து வரவேண்டும்" என்று எண்ணியிருந்த எண்ணம் இந்நிகழ்ச்சியால் உரம் பெற்று அடுத்த ஆண்டு விழாச் சார்பில் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வது என்று குருகுலச் சார்பில் தீர்மானிக்கப் பெற்றது.

ஊர்வலமும் சொற்பொழிவுகளும்

திருக்கழுக்குன்றம் மெய்கண்டார் திருத்தொண்டர் கழகத்தினர் முன்னின்று ஆசிரியருக்கும் திருக்கூட்டச் செயலாளர் முதலியோருக்கும் மாலையிட்டு வரவேற்க, ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களுமாகத் திரண்டு தாழக் கோயிலைச் சுற்றி மாட வீதிகளில் ஊர்வலம் வந்தனர். எவரும் எதிர்பாரா வகையில் ஆசிரியர் அவர்கள் தாமே முன்வந்து நான்கு பக்கத்துத் திருக்கோபுர வாயில்களுக்கு எதிரிலும், உயர்ந்த இடத்தில் எழுந்து நின்று வீதிச் சொற்பொழிவுகள் செய்தார்கள். 'ஒற்றுமை' என்னும் சொல்லை அடிப்படையாக வைத்து "அருள் நெறியை" மறுக்கும் அன்பர்களுக்கும் தெளிவு உண்டாகும் வகையில் கடவுள் உணர்ச்சியின் இன்றியமையாமையை இனிது வற்புறுத்தினார்கள். எழுச்சி மிக்க அவர்கள் உரை எல்லோருக்கும் நல்ல கிளர்ச்சியைக் கொடுத்தது. ஊர்வலம் 7 மணிக்கு அடிவாரத்தில் வந்து முடிந்தது.

வரவேற்பிதழ்கள்

பின்னர் வழக்கம்போல் செங்கற்பட்டு பெரிய நத்தம் தொண்டை நாட்டு அருள்நெறித் தொண்டர் கழகத்தின் சார்பிலும், திருக்கழுக்குன்றம் மெய்கண்டார் கழகத்தின், சார்பிலும் வரவேற்பிதழ்கள் படித்துக் கொடுக்கப்பட்டன. பிறகு எல்லோரும் திரளாகத் தாழக் கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்து கொண்டு திரிபுரசுந்தரியின் திருக்கோலக் காட்சியைக் கண்டு மகிழ்ந்தனர்.

திருவருட் பொழிவு

மக்கள் திருக்கோயில் முழுதும் நிரம்பி நெருக்கமாகக் கூடிப் பரவசப் பட்டுக்கொண்டிருக்கிற நிலையில் திருவருளே திரண்டு வந்து பொழிவதுபோல் பெருமழை பிடித்துக்கொண்டது. இம்மாதிரி மழை பெய்து 7-8 ஆண்டுகள் ஆய்விட்டன என்று சொல்லும்படி இரவு முழுவதும் நல்ல மழை பெய்தது. அதனால் இரவு நிகழவேண்டிய திரு. சங்கரலிங்கம் அவர்களின் பாராயணம் வேறு நேரத்தில் மாற்றிக்கொள்ளப்பட்டது.

திருப்புகழ்மணியின் திருத்தோற்றம்

மறுநாள் 2-7-54. வெள்ளியன்று யாவரும் உள்ளமும் குளிர்ந்து நிற்க, பொள்ளெனப் புலர்ந்த புலரிக்காலையில் தெள்ளிய வெள்ளைத் திருநீற்றொளியுடன் அடிவாரத்தில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான அடியார் திருக்கூட்டத்தில் சென்னையிலிருந்து உந்து வண்டி (காரில்) யில் வந்து கலந்துகொண்ட திருப்புகழ்மணி அவர்கள் விண்மீனிடைத் திகழ் வெண்மதியென்னத் தோன்றினார்கள்.

திருப்படி விழா

அவர்களுக்கு மாலை அணிவித்து அக் காட்சியை அப்படியே நிழற்படமாக்கிக் கொண்டபின் திருப்படிவிழா தொடங்கியது. படிதோறும் அன்பர்கள் பழமும் பட்டியும் வைத்துக் கர்ப்பூரம் ஏற்றி வழிபட்டு வர, வழக்கம்போல் தமக்கே உரிய தனிப் பாணியில் திருப்புகழ்மணியவர்கள் பத்திச் சுவை சொட்டும் பாடல்களையும் இடையிடையே பரிபக்குவம் தரும் தெய்வத் திருப்பெயர்களையும், விளக்க உரைகளையும் இசையோடு குழைத்து மிழற்றி ஓதி முழங்கி வழங்கிக் கொண்டே படி ஏறினார்கள். அவர்களுடைய சூழலில் மூழ்கித் திளைத்த அடியார்களும் இடையிடையே தம்மை மறந்து பாடியும் "அரகர" ஒலிகளை அம்மலையிட மெங்கும் எதிரொலி செய்ய எழுப்பிக் கொண்டும் பின் தொடர்ந்தனர்.

அடியார் காட்சி

திருப்படிகளின் அடிமுதல் முடிவரை நிரம்பி நெருங்கி இருந்த அடியவர் கூட்டத்தின் திருக்காட்சியை என்னென்று வருணிப்பது! ஆறுகளெல்லாம் மலையுச்சியில் தோன்றிப் பள்ளத்திலுள்ள கடலையடைய ஆர்ப்பரித்துக் கொண்டு கீழிறங்கி வரும். ஆனால் இங்கே மலையடிவாரத்திலிருந்து கிளம்பிய பத்திப் பேராறு மலையுச்சியிலுள்ள கருணைக் கடலையடைய மேல் நோக்கி முழங்கிக் கொண்டு போயிற்று.

உச்சி செல்வர் வழிபாடு

மலைமேல் வழக்கம் போல் உச்சிச் செல்வருக்கு, திருமுழுக்கும் வழிபாடும் செய்வித்துத் தொழுது வணங்கித் திருநீறணிந்து கழுகுக் காட்சியையும் கண்டபின் அன்பர்கள் எல்லோரும் இறங்கி வந்து, சிவத்திரு வள்ளியம்மையார் அவர்களிடத்தும் ஏற்ற பிற இடங்களிலும் உணவு கொண்டு சிறிது நேரம் ஓய்வுற்றிருந்தனர்.

மலைவலம்

இதுகாறும் நடைபெற்ற சிறப்புக்களில் 'சிரித்தும் களித்தும்' ஈடுபட்ட அன்பர்கள் 'தேனிப்பதற்கு'க் குறிப்பிட்டபடி மாலை 4 மணிக்கே மீண்டும் ஆசிரியர் தலைமையில் அடிவாரத்தில் திரண்டனர். சிவபுராணம் முதலிய திருவருள் பாடல்களையும் பாராயணம் செய்துகொண்டே மலைவலமாகச் சொக்கம்மை மலைச்சாலை அடைந்தனர். அமைதியாக அமர்ந்து ஆசிரியரின் அருள் மொழிகளைக் கேட்டனர்.

ஆசிரியர் அருளுரை

அமைதி, நாட்டம், இயற்கைத் துணை, அலைவுக்கிடையே அமைதி, நிலையாமைக்கிடையே நிலைத்தன்மை இவைகளை விளக்கித் திருக்கழுக்குன்ற விழாப் போன்ற ஆரவார மிக்க பெரிய விழாச் சூழலிலேயே உரிய அமைதி பெற நாம் முயலவேண்டும் என்று தெரிவித்துத் தேனிப்பு (தியானம்) முறைகளையும் நேரத்திற்கேற்பச் சிறிது விளக்கினார்கள்.

விழாத் தலைவர், வாரியார் வரவு

இடையில் வாரியார் அவர்களுடனும், தமது பரிவாரங்களுடனும் விழாத்தலைவர் சிவத்திரு. சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் மதுரையிலிருந்து உந்து வண்டியில் போந்து கலந்து கொண்டார்கள்.

வாரியார் உரையும் தேனிப்பும்

ஆசிரியர் கேட்டுக் கொண்டபடி வாரியார் அவர்களும் நேரத்திற்கேற்ப புலனடக்கம் பற்றிய "தடுங்கோள் மனத்தை" என்னும் கந்தரலங்காரப் பாடலைச் சிறிது நேரம் அழகாக விளக்கினார்கள். அருளூறல் போலச் சிறுதூறல் பெய்து கொண்டே இருந்தது. அதனால் அவரவர் மன நிலைக்கேற்பத் தேனிப்பில் ஈடுபட்டு அடிவாரம் போந்தனர்.

சங்கரலிங்கம் இசை, அமைச்சர் வரவு

முன் இரவு மழை வெள்ளம் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட சென்னை இசை வள்ளல் திரு சங்கரலிங்கம் அவர்கள் திருமுறை இசைவெள்ளம் அங்கே ஓடிக்கொண்டிருந்ததைக் கண்டு அதில் மூழ்கித் திளைத்தனர். அமைச்சர் பக்தவச்சலனார் அவர்கள் குறிப்பிட்டபடி காலையில் வர முடியாமற் போனமையால் இந்நிகழ்ச்சியின்போது வந்து சிறிது நேரம் இருந்து மகிழ்ந்து சென்றனர்.

(வரும்)

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், இ. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம் மாம்பாக்கம், மதுராந்தகம். (அஞ்)